ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2132/18 - 2019 ජූලි මස 19 වැනි සිකුරාදා - 2019.07.19

*2132/18 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டம்***

57 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 57 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இலங்கை மின்சார சபைக்கு அவசியமானதும் இங்கு அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளதுமான காணியை சுவீகரித்துக்கொள்வதற்கான முன்மொழிவை இவ்வுத்தரவின் மூலம் அனுமதிக்கின்றேன்.*

ரவி கருணாநாயக்க,
மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர்.

*2019, யூலை 11.*

1A - G 30534 — 27 (2019/07)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

இலங்கையின் தென் மாகாணம், காலி நிருவாக மாவட்டத்தில் நியாகம பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 34, மத்தக கிராம அலுவலர் பிரிவில் மத்தக கிராமத்தில் அமைந்துள்ள பென்தொட வலல்லாவிட கோரளையில் அரச அதிகாரம்பெற்ற அளவையாளர் ஒருவர் மூலம் தயாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 1061 மற்றும் 2019.04.11 ஆந் திகதியுடைய திட்டத்தில் காணித்துண்டு இலக்கம் (1) மற்றும் (2) என அடையாளம் இடப்பட்டுள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள எல்லையுடன் 21.7 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய காணி :-

**காணித்துண்டு இலக்கம் 01 :**

வடக்கு : ஹாதவில வயற்காணி ;
கிழக்கு : பாதைக்கு இணையாக உள்ள கால்வாய் ;
தெற்கு : ஹாதவில நின்தமுல்ல வயற்காணி ;
மேற்கு : இத்திட்டத்தில் காணித்துண்டு இலக்கம் 2 என காட்டப்பட்டுள்ள பகுதி.

உரிமை கோருபவர் : மார்துபிடிய ஏபாகே குலரத்ன.

**காணித்துண்டு இலக்கம் 02 :**

வடக்கு : ஹாதவில வயற்காணி ;
கிழக்கு : இத்திட்டத்தில் காணித்துண்டு இலக்கம் 1 என காட்டப்பட்டுள்ள பகுதி ;
தெற்கு : ஹாதவில நின்தமுல்ல வயற்காணி ;
மேற்கு : ஹாதவில வயற்காணி.

உரிமை கோருபவர் : மார்துபிடிய ஏபாகே குலரத்ன.

08-146

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.